*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **21 செப்டம்பர் 2023**

# பத்திரிகை செய்தி

திருச்சி, “கிராமாலயா” மற்றும் “டெட்டால் பனேகா ஸ்வஸ்த் இந்தியா “ சார்பில் டெட்டால் பள்ளிச் சுகாதாரக் கல்வி நிகழ்ச்சி ஓட்டல் சன்வே மேனரில் இன்று(21-09-2023) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் திருமதி சந்திர பிரயங்கா மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
நிகழ்ச்சியில் உரையாற்றிய துணைநிலை ஆளுநர்,

- “கிராமலயா” தாமோதரன் கடந்த 35 ஆண்டு காலமாக கிராமப்புறங்களை மேம்படுத்துவதற்காக செய்துவரும் முயற்சிகளுக்காக சமீபத்தில் பத்மஸ்ரீ பட்டம் பெற்றார். அதற்காக என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களை எப்போதும் மகிழ்ச்சியாக நினைவுகூர்வதற்கு காரணம், இதற்கு முன்பு பிரபலமானவர்கள் மட்டுமே பத்மஸ்ரீ விருது வாங்கிக் வந்தார்கள். ஆனால், இன்று பிறருக்கு சேவை செய்வதன் மூலம் அனைவரும் இந்த விருதைப் பெறமுடியும் என்பதற்கு தாமோதரன் போன்றவர்கள் உதாரணமாக இருக்கிறார்கள்.
- 2014 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில் பாரதப் பிரதமர் ‘ஸ்வச் பாரத்’ தூய்மை இந்தியா திட்டத்தை அறிவித்தார். அவர் பேசுவையில் “உங்களுக்கு சுதந்திரமான இந்தியா முதலில் வேண்டுமா? அல்லது சுகாதாரமான இந்தியா வேண்டுமா? என்று கேட்டால் எனக்கு முதலில் சுகாதாரமான இந்தியாதான் வேண்டும் என்பேன். ஏனென்றால் சுகாதாரமான இந்தியா தான் சுதந்திரமான இந்தியாவை உருவாக்க முடியும்” என்று தெரிவித்தார்.
- ‘ஸ்வச் பாரத்’ தூய்மை இந்தியா திட்டத்தை பாரதப் பிரதமர் முன்னெடுத்ததன் மூலம் கை கழுவாதது, குப்பைகள் சேருவது போன்றவற்றால் வரும் நோய்கள் தடுக்கப்பட்டு இருக்கிறது. அதனால் ஏற்படவிருந்த 16 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு முதல் வருடத்திலேயே தடுக்கப்பட்டது.
- ‘சுத்தம் சோறு போடும்’ என்பது, சுத்தமாக இருந்தால் நோய் வராது; ஆரோக்கியமாக இருந்து நல்ல உணவினை உண்ண முடியும் என்பது தான் பொருள். ‘கந்தையானாலும் கசக்கி கட்டு’ போன்ற பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்.
- தாமோதரன் அவர்களின் வாழ்க்கை மிகவும் ஆச்சரியமானதாக இருக்கிறது. ஒரு கல்லூரி மாணவராக ஒரு கிராமத்திற்கு செல்லும்போது அந்த கிராம மக்களுக்கு செய்ய வேண்டும் என்று நினைத்து தனது தீவிர முயற்சியால் அங்கே கழிப்பறை கட்டுவது, சுகாதார நடவடிக்கைகளில் பயிற்சி அளிப்பது, சுத்தமான கிராமத்தை உருவாக்குவது, கைத்தொழில் கற்றுக் கொடுப்பது போன்ற செயல்களை செய்திருக்கிறார். “கிராமாலயம்” - என்று ஒரு கிராமத்தை கோயிலாக மாற்ற அவர் நிர்ணயித்திருக்கிறார்.
- திருச்சியில் இருந்து வந்து இங்கு இந்த இயக்கத்தைத் தொடங்கியிருப்பது மிகவும் மகிழ்ச்சியானது. தமிழகத்தில் எது வந்தாலும் நாங்கள் அதை எடுத்துக் கொள்வோம் என்பதை இது காண்பிக்கிறது.

- சுயநலம் இல்லாமல் யார் நாட்டிற்காக பணியாற்றுகிறார்களோ அவர்களை அனைவருக்கும் பிடிக்கும். குழந்தைகளுக்கு எது செய்தாலும்; அது வருங்காலத்துக்கு நாம் செய்யும் உதவியாக இருக்கும்.
- அதனால்தான் நேற்றைய தினம் துணைநிலை ஆளுநர் நிலையத்தில் “திறமை தேடல்” என்கிற நிகழ்ச்சி நடைபெற்றது. உண்மையிலேயே அரசு பள்ளி மாணவர்கள் திறமையாக இருக்கிறார்கள்.
- புதுச்சேரியில் அரசு பள்ளி மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி சேர்க்கையில் 10% இடஒதுக்கீட்டை அரசு வழங்கியிருக்கிறது. நீட் ஆனது மாணவர்க்ளுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறது. ஆனால் அரசியல் ரீதியாக இது தவறாக சித்தரிக்கப்பட்டு இருக்கிறது.
- நேற்று, உயர் கல்வியில் நீட் மதிப்பெண் விகிதம் பூஜ்ஜியம் சதவீதமாக இருந்தாலும் அவர்களையும் அனுமதிக்கலாம் என்கிற செய்தியை அரசு அறிவித்திருந்த நிலையில், பலர் அதற்கு விமர்சனம் சொல்லி இருந்தார்கள். பூஜ்ஜியம் மதிப்பெண் வாங்கினாலே அவர்கள் மருத்துவ சேர்க்கையில் அனுமதிக்கப்படுவார்கள் என்கிற தவறான பிம்பம் சித்தரிக்கப்பட்டு வருகிறது.
- ஜீரோ ‘பர்சன்டைல்’ என்றால் தரவரிசையில் முதலிடத்தில் இருப்பவர்கள் அந்த சீட்டை எடுக்காமல் இருந்தால், இடங்கள் காலியாக இருக்கும் பட்சத்தில் அந்த வரிசையில் கடைசியில் இருந்தால் கூட அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம்.
- எனவே, நீட் எழுதுவதிலும் தரவரிசை வருவதிலும் மதிப்பெண் பெறுவதிலும் பிரச்சனை இல்லை. மருத்துவத்தில் குறிப்பாக சில மருத்துவம் சாராத துறைகளில் இடங்கள் காலியாக இருப்பதினால் இத்தகைய அறிவிப்பு அரசால் கொண்டு வரப்பட்டுள்ளது. எதுவும் வீணாகாமல் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்பதையே பாரதப் பிரதமர் நோக்கமாகக் கொண்டு இதனை அறிவித்திருக்கிறார்.
- பள்ளி மாணவர்களுக்கு சுகாதார நடவடிக்கைகளை சொல்லித்தருவதன் மூலம் 90 % நோய்களைத் தடுக்க முடியும் என்று மருத்துவ ஆய்வு சொல்கிறது.
- குழந்தைகளுக்கு கை கழுவுவதை சொல்லிக் கொடுக்க வேண்டும். கைகளை சுத்தமாக ஆரோக்கியமாக பார்த்துக் கொண்டால், அதன் மூலம் வாழ்க்கையில் முன்னேற முடியும். புதுச்சேரியில் எல்லா வகையிலும் மாணவர்களுக்கு நல்லது செய்யப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்.
- அரசு அதிகாரிகள் பெரிய நிகழ்ச்சிகளுக்க மட்டுமல்லாமல் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொண்டு சேர்க்க வேண்டும். எவ்வளவு கல்வி கற்ற முன்னேறி இருந்தாலும் அடிப்படையான சுகாதாரம் இல்லை என்றால் நம்மால் முன்னேற முடியாது. எனவே குழந்தைகளை அழைத்து கை கழுவும் பழக்கத்தைச் எடுத்துச் சொல்லி சுகாதாரமாக இருக்க வேண்டும் என்பதை சொல்லிக் கொடுக்கிறார்கள்.
- புதுச்சேரி மாநிலம் பொதுவெளியில் மலம் கழிக்காத (Open Dedication free) மாநிலங்களில் முன்னிலையில் இருக்கிறது. புதுச்சேரி மத்திய அரசால் சிறந்த மாநிலமாக தேர்ந்தெடுக்கப்படுகிறது. புதுச்சேரி முன்னேறிக் கொண்டிருக்கிறது.
- அதற்காக முதலமைச்சரும், சட்டமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல முன்னேற்றங்களை அடைவதற்காக முயற்சி செய்யும்.

என்று தெரிவித்தார்.